1994 மார்ச் 29]

தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், என்னுடைய திருவட்டார் தொகுதியிலே சில கிராமங்களில் இன்னும் பஸ் வசதி இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக முகவூர் என்னும் கிராமத்திலே 1500 மக்கள் தொகை இருக்கிறது. ஆனால் இதுவரையிலேயும் பஸ் வசதி இல்லை. அமைச்சரவர்கள் அங்கே பஸ் வசதி செய்து கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பொறுப்பேற்றதற்குப் பிறகு 1000 ஜனத்தொகை இருக்கின்ற இடங்களுக்கெல்லாம் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொன்னார்கள். போன ஆண்டு, 18 கிராமங்களைத் தவிர அனைத்து கிராமங்களுக்கும் பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. சாலை வசதிகள் இருக்குமேயானால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஒரே வார காலத்தில் நிறைவேற்றித் தரப்படும்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு எங்கள் கிராமங்களிலே ஓடுகின்ற வண்டியெல்லாம் மிகவும் பழமையான பத்து வருஷங்களுக்கு மேலான நேசமணி போக்குவரத்துக் கழக வண்டிகள்தான் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அங்கு இந்த வருஷமாவது புது வண்டிகளை விட்டு, பொது மக்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே இருக்கின்ற 100 பேருந்துகளைப் புதிய பேருந்துகளாக மாற்றுவதற்காக 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டே அதற்கான பணிகளை மேற்கொண்டு, மே மாதத்திற்குப் பிறகு பழைய பேருந்துகளே உங்கள் பகுதியிலே இருக்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 126, டாக்டர் எம்.பி. சேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

126—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓட்டுநர்/நடத்துனர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள்/கருத்தரங்குகள் நடத்துதல்

***21775—டாக்டர் எம்.பி. சேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஓட்டுநர்/ நடத்துனர்களுக்கு சாலை விபத்துக்களைத் தடுக்கின்ற வகையில்

அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள்/கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அத்தகைய பயிற்சி வகுப்புகளுக்கும்/கருத்தரங்குகளுக்கும் visiting faculty—யாக அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்த டாக்டர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதுவரையில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்த டாக்டர்கள் visiting faculty—ஆக பங்கேற்கவில்லை. அவர்கள் விரும்பினால் இனி மேற்கொண்டு வாய்ப்பு அளிக்க கருத்தில் கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10 -30

டாக்டர் எம். பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையிலே, புத்துணர்ச்சியையும், புதிய வேகத்தையும் புகுத்தி, திறம்படச் செயலாற்றி, போக்குவரத்துத் துறையிலே ஒரு மறுமலர்ச்சியைச் செய்துவரும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி. அவற்றிற்கு, அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்த டாக்டர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை வினவுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் முன்வந்தால், அந்த வாய்ப்பு அளிக்கப்படும் என்பதை முதலிலேயே சொல்லியிருக்கிறேன். இங்கே அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவ்வாறு முன்வருவதற்கு யார், யார் விரும்புகிறார்களோ, அவர்களின் பட்டியலை எங்களுக்குத் தந்தால், நாளையே வேண்டுமென்றாலும் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள், முதலுதவிப் பயிற்சி பெற்றிருந்தாலும், விபத்து நேரிடும்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி `in-service training` என்ற அடிப்படையில், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை, சிறப்புப் பயிற்சி வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையும் நாங்கள் கருத்திலே கொண்டுதான்,

1994 மார்ச் 29]

வருகின்ற நிதியாண்டிலே பல்வேறு புதிய திட்டங்களை, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை-வருகின்ற போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்போது, நீங்கள் கேட்கின்ற கோரிக்கைகள் அத்தனையையும் — நிறைவேற்றுவதற்கு தொலைநோக்குப் பார்வையோடு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவி போக்குவரத்துக் கழகத்தை, உலகிலேயே ஒரு முன்மாதிரிப் போக்குவரத்துக் கழகமாக உருவாக்கும்வகையிலே, விபத்தே இல்லாத, ஓடும்போது பழுதே ஏற்படாத, தொழிலாளர்கள் போராட்டமே நடைபெறாத போக்குவரத்துக் கழகமாக உருவாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் வகையில், அந்தக் கழகம், பணியாளர்களுக்குப் பிரத்தியேகமாகப் பயிற்சி அளிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல; உலக வரலாற்றிலே ஒரு போக்குவரத்துக் கழகம், புதிதாகத் துவக்கப்பட்டதற்குப் பிறகு, இதுபோன்ற பேருந்துகளை இயக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் வேண்டுமானால் இயக்கி இருக்கலாம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது சொன்னார். இப்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை நாம் பிரித்து இருக்கிற காரணத்தினால், அதிலிருந்து குறிப்பிட்ட பேருந்துகளை, பழைய பேருந்துகளை நாம் பெற்றிருக்கிறோம். படிப்படியாக, ஆண்டுதோறும், 100, 100 பேருந்துகளை மாற்றுவதற்காக நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அவற்றிலே, பயிற்சி பெற்ற, தேர்ச்சி பெற்ற, சிறந்த பணியாளர்களைத்தான் ஓட்டுநர்கள் இடத்திலே அமர்த்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அதற்குத் தனி அக்கறை எடுத்து, அந்தப் போக்குவரத்துக் கழகம்— நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரை உச்சரித்துக் கொண்டிருக்கிற அந்தப் போக்குவரத்துக் கழகம் — இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டுமல்ல; மேலை நாடுகளிலிருந்து வருவோரும் பாராட்டுகிற அளவுக்கு, இன்னும் இரண்டாண்டுகளில் சிறப்புற உயர்ந்து ஓங்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரால் இயங்கிவருகிற பேருந்துகளின் இயக்கம், அண்டை மாநிலங்களான ஆந்திரா, பம்பாய், டெல்லி போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா? அதேபோல், ஜப்பானில் இருக்கிற ....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆந்திரா, அண்டை மாநிலம் சரி; பம்பாய், டெல்லி போன்றவைகள் எல்லாம் அண்டை மாநிலங்கள் அல்ல; ரொம்ப தூரத்திலே இருக்கக்கூடிய மாநிலங்கள்.

திரு. கே. பி. ராஜு: அவை இந்தியா முழுவதும் விஸ்தரிக்கப்படுமா? அதேபோல், புரட்சித்தலைவியினுடைய பெயரால் இயங்குகின்ற அந்தப் பேருந்துகள், ஜப்பானில் இருக்கிற குளுகுளு பேருந்துகளைப் போல ஆக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவார காலத்தில், நீங்கள் நினைப்பதுபோல, குளுகுளு பேருந்துகள் இங்கே தமிழகத்தில் விடப்படும். ஏழை எளிய மக்களும், இந்தக் குளுகுளு பேருந்திலே செல்வதற்காக, போக்குவரத்துத் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, பம்பாய் வரையிலும் செல்லுமா என்று கேட்டார்கள். பம்பாய் வரையிலும் விமானம் இருக்கிறது; ரெயிலும் இருக்கிறது. ஆகவே இந்தப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில், தென் மாநிலங்களாக இருக்கிற கர்னாடகா, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களுக்கு இயக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 127, திருமதி ரெ.சியாமளா, இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திருமதி என். கனகவல்லி கேட்கிறார். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

127 —

எட்டையபுரத்தில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டி வழங்குதல்.

***10315**—திருமதி ரெ. சியாமளா:*

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டையபுரத்தில் நெசவாளர்களுக்குக் கட்டித்தரும் வீடுகள் பாதி கட்டப்பட்ட நிலையிலேயே வழங்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு முழுமையான வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?